MAY 2025 **P/ID 28512/PCM1A**

Time : Three hours Maximum : 80 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions

1. What is meant by over subscription?
மிகை மூலதனம் சந்தா என்றால் என்ன?

2. What are convertible debentures?
மாற்றத்தக்க கடன் பத்திரங்கள் என்றால் என்ன?

3. Write note on super profit.
மிகை இலாபம் பற்றி சிறு குறிப்பு வரைக.

4. Define capitalization method.
மூலதனமாக்கல் முறையை வரையறுக்கவும்.

5. What is capital reserve?
மூலதன இருப்பு என்றால் என்ன?

6. Define absorption.
நிறும ஈர்ப்பு பற்றி நீ அறிவது யாது?

7. What do you mean by purchase consideration?
கொள்முதல் மறுபயன் பற்றி நீ அறிவது யாது?

8. Give note on liquidator.
நிறுவன கலைப்பவர் பற்றி குறிப்பு எழுதுக.

9. What is minority interest?
சிறுபான்மையினர் நலன் என்றால் என்ன?

10. Write the meaning of non-performing assets.
செயல்படாத சொத்து பற்றிய பொருள் எழுதுக.

11. Mention about Re-insurance.
மறுகாப்பீடு பற்றி குறிப்பிடவும்.

12. Define subsidiary company.
துணை நிறுவனத்தை வரையறுக்கவும்.

PART B — (5 × 6 = 30 marks)

Answer any FIVE questions.

13. Patel Ltd was formed to acquire the property from Balu for Rs. 5,00,000 Patel Ltd. issued to the public Rs. 55,000 share at 10 each and received the money as follows :

Rs. 3 on application, Rs. 4 on allotment and the balance on first and final call.

The purchase consideration was fully satisfied by issuing Rs. 45,000 shares of Rs. 10 each as fully paid up and the balance in cash. The preliminary expenses of Rs. 22,000 were paid by the company. Share holders 820 shares failed to pay final call and after due notice, their share were forfeited. These shares were reissued at a price of Rs. 6 per share as fully paid up.

Give necessary journal entries in the books of Patel Ltd.

பட்டேல் லிமிடெட், பாலுவின் சொத்துக்களை ரூ. 5,00,000க்கும் எடுத்து கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. பட்டேல் லிமிடெட் ரூ. 55,000 பங்குகளை ரூ. 10 வீதம் கீழ்வருமாறு வெளியிட்டது.

விண்ணப்பத்தின் மீது ரூ. 3, ஒதுக்கீட்டின் மீது ரூ. 4 மற்றும் மீதியுள்ள தொகை முதல் மற்றும் இறுதி அழைப்பில் பெறப்பட்டன.

கொள்முதல் மறுபயன் 5,00,000-ஐ 45,000 பங்குகள் பங்கொன்று ரூ. 10 வீதமும், மீதமுள்ள தொகை ரொக்கமாகவும் செலுத்தப்பட்டது. தொடக்கச் செலவுகள் ரூ. 22,000 வாங்கும் நிறுமத்தால் கொடுக்கப்பட்டது. 820 பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் இறுதி அழைப்பு பணம் கொடுக்கவில்லை. இப்பங்குகள் உரிய அளிப்பு கொடுக்கப்பட்டு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. இந்த ஒறுப்பிழைப்பு செய்யப்பட்ட பங்குகள் பங்கொன்றிற்கு ரூ. 6 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டது.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை பட்டேல் லிமிடெட்டின் ஏடுகளில் தரவும்.

14. Pass Journal entries for the following transaction :

(a) A company issued 1000, 8% debentures of Rs. 100 each at par, redeemable at par.

(b) A company issued 1000, 8% debentures of Rs. 100 each at a discount of 5% redeemable at par

(c) A company issued 1000, 8% debenture of Rs. 10 each at a premium of 10%, redeemable at par.

(d) A company issued 1000, 8% debenture of Rs. 100 each at a discount of 5% redeemable at a premium of 10%

கீழ்காணும் விவரங்களுக்கு முதற் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(அ) ஒரு நிறுமம் 1000, 8% ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புள்ள கடன் பத்திரங்களை முக மதிப்பிற்கு வெளியீடு செய்து, முகமதிப்பிற்கே திரும்பப் பெறுகிறது.

(ஆ) ஒரு நிறுமம் 1000, 8% ஒவ்வொன்றும் ரூ. 100 மதிப்புள்ள கடன் பத்திரங்களை 5% தள்ளுபடியில் வெளியீடு செய்து, முகமதிப்பிற்கே திரும்பப் பெறுகிறது.

(இ) ஒரு நிறுவனம் ரூ. 10 முகமதிப்பு கொண்ட 1000, 8% கடனீட்டு பத்திரத்தை 10% பிரீமியத்தில் வெளியிட்டு முகமதிப்பில் மீட்டது.

(ஈ) ஒரு நிறுவனம் ரூ. 100 முகமதிப்பு கொண்ட 1000, 8% கடனீட்டு பத்திரத்தை 5% தள்ளுபடியில் வெளியிட்டு, 10% முனைமத்தில் மீட்டது.

15. Explain the factors affecting goodwill.

நன்மதிப்பை பாதிக்கும் காரணிகளை விளக்குக.

16. Explain the various methods of calculating purchase consideration.

கொள் முதல் மறுபயன் கணக்கிட உள்ள பல்வேறு முறைகளை விளக்குக.

17. The following figures relate to life Insurance Corporation for the year ended 31.3.1996. Prepare the Revenue A/c.

Claims	39,000
Management expenses	14,000
Directors fees	4,000
Audit fees	3,000
Medical expenses	500
Agent commission	5,000
Depreciation	4,000
Bonus in reduction of premium	1,500
Consideration for annuities granted	16,500
Surrenders	9,000
Premium	1,51,000
Life fund (1.4.95)	11,50,000
Interest received	40,000
Rent received	10,000
Claims cancelled	500
Annuities	1,500

Note :

(a) Premium outstanding Rs. 9,000

(b) Claims outstanding Rs. 3,000

கீழ்கண்ட விவரங்கள் 31.3.96-ல் ஆயுள் காப்பீடு கழகத்தைச் சார்ந்தது வருவாய் கணக்கைத் தயாரிக்கவும்.

உரிமை கோரல்கள்	39,000
நிர்வாக செலவுகள்	14,000
இயக்குநர் கட்டணம்	4,000
தணிக்கை கட்டணம்	3,000
மருத்துவ செலவுகள்	500
முகவர் கழிவு	5,000
தேய்மானம்	4,000
மேலுாதியம், சந்தா தொகைக்கான கழிவு	1,500
ஆண்டு தொகை அளித்ததற்கான மறுபயன்	16,500
சரண் மதிப்பு	9,000
சந்தா தொகை	1,51,000
ஆயுள் நிதி (1.4.95)	11,50,000
வட்டி பெற்றது	40,000
வாடகை பெற்றது	10,000
உரிமை கோரல்கள் நீங்கியது	500
ஆண்டுத்தொகை	1,500

குறிப்பு :

(அ) நிலுவை சந்தா ரூ. 9,000

(ஆ) நிலுவை உரிமை கோரல்கள் ரூ. 3,000

18. The Sun Co. Ltd., acquired 18,000 equity shares in the Moon Co. Ltd. On 31st December 1996. On this date, the balance sheets of the two companies were :

	Sun Co. Ltd. Rs.	Moon Co. Ltd. Rs.		Sun Co. Ltd. Rs.	Moon Co. Ltd. Rs.
Share capital :			Sundry assets	3,10,000	3,20,000
Equity shares of Rs. 10 each	4,00,000	3,00,000	Investment :		
Profit and Loss a/c	80,000	–	Shares in Moon Co. Ltd.18,000 at cost	1,80,000	–
Creditors	10,000	20,000			
	4,90,000	3,20,000		4,90,000	3,20,000

Prepare Consolidated Balance Sheet.

31 டிசம்பர் 1996 அன்று சன் கம்பெனி மூன் கம்பெனி சாதாரண பங்குகள் 18,000 ஐ வாங்கியது. அந்த நாளில் இரு கம்பெனிகளின் இருப்பு நிலை குறிப்பு கீழ்க்கண்டவாறு இருந்தது.

	சன் கம்பெனி ரூ.	மூன் கம்பெனி ரூ.		சன் கம்பெனி ரூ.	மூன் கம்பெனி ரூ.
பங்கு முதல் :			பல்வகை சொத்துக்கள்	3,10,000	3,20,000
சாதாரண பங்குகள் ரூ. 10 வீதம்	4,00,000	3,00,000	முதலீடுகள் :		
இலாப நட்ட க/கு	80,000	–	மூன் கம்பெனி பங்குகள் 18,000 அடக்கம்	1,80,000	–
கடனீந்தோர்கள்	10,000	20,000			
	4,90,000	3,20,000		4,90,000	3,20,000

ஒன்றிணைந்த இருப்பு நிலை குறிப்பு தயாரிக்க.

19. From the following particulars, prepare profit and loss account of Royal Bank for the year ended 31st March 2020 :

	Rs. in '000
Interest on deposits	3,200
Commission (Cr.)	100
Interest on loans	2,490
Sundry Charges (Dr.)	100
Rent and Taxes	200
Payment to employees	500
Discount on bills discounted	1,490
Interest on overdrafts	1,600
Interest on cash credits	2,320
Auditors fees	35
Directors fees	16
Bad debts	300

ராயல் வங்கியின் 2020ம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளில் முடிவுறும் இலாப நட்ட கணக்கை கீழ்காணும் விவரங்களிலிருந்து தயார் செய்க.

	ரூ. ('000)
வைப்பு மீது வட்டி	3,200
கழிவு (வரவு)	100

கடன் மீது வட்டி	2,490
இதர கட்டணங்கள் (பற்று)	100
வாடகை மற்றும் வரி	200
ஊழியர்களுக்கு செலுத்தியது	500
தள்ளுபடி செய்யப்பட்ட உண்டியல் மீது தள்ளுபடி	1,490
மேல்வரை பற்று மீதான வட்டி	1,600
ரொக்க கடன் மீது வட்டி	2,320
தணிக்கையாளர் கட்டணம்	35
இயக்குநர் மீது கட்டணம்	16
வாராக் கடன்	300

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions

20. X Ltd. issued for public subscription 2,00,000 equity shares at Rs. 100 each at a premium of Rs. 20 per share, payable as under.

On application - 20 per share

On Allotment - 50 per share (including premium)

On I call - 20 per share on II call – Rs. 30 per share.

Application were received for 3,00,000 shares. The shares were allotted pro-rata to the applications for 2,40,000 shares, the remaining applications being rejected. Money over paid on application was utilised towards sum due to allotment.

Ravi to whom 8,000 shares were allotted, failed to pay allotment and calls money and Raja to whom 10,000 shares were allotted failed to pay two calls. These shares were forfeited after making second call.

All the forfeited shares were sold to Kalyan as fully paid up at Rs. 80 per share.

Pass journal entries in the company's books.

X லிட் பொது வெளியீட்டிற்கு 2,00,000 சாதாரண பங்குகளை, ஒரு பங்கு ரூ. 100 முகமதிப்பு உள்ளதை ரூ. 20 முனைமத்துடன் வெளியீடு செய்தனர்.

	ரூ.
விண்ணப்பம்	20 (பங்கு ஒன்றுக்கு)
ஒதுக்கீடு	50 (முனைமத் தொகை உட்பட) பங்கு ஒன்றுக்கு
முதல் அழைப்பு	20 (பங்கு ஒன்றுக்கு)
இரண்டாம் அழைப்பு	30 (பங்கு ஒன்றுக்கு)

3,00,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 2,40,000 பங்குகளுக்கு விகிதாச்சாரமுறையில் பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மீதி உள்ளவை மறுக்கப்பட்டன. விண்ணப்பத்தில் பெறப்பட்ட மிகைத் தொகை ஒதுக்கீட்டில் சரி செய்யப்பட்டது.

ரவி என்பவருக்கு 8,000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. இவற்றிற்கு ஒதுக்கீட்டு தொகை மற்றும் அழைப்புகள் செலுத்தப்படவில்லை. ராஜா என்பவருக்கு 10,000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தது. அவர் இரண்டு அழைப்புகளையும் செலுத்தப்படவில்லை. இரண்டாம் அழைப்புக்குப் பின் இந்த பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்து பங்குகளும் கல்யாண் என்பவர் ரூ. 80 ஒரு பங்கு வீதம் முழுமையாக பெறப்பட்டவையாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிறுமத்தில் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகளை தருக.

21. Define goodwill. What are the different methods of calculation of goodwill?

நற்பெயர் என்றால் என்ன? நற்பெயர் கணக்கிடும் பலவகையான முறைகளை விளக்கவும்.

22. The company went to voluntary liquidation on 31.12.2020. The following is given balance sheet of the Co. as on 31.12.2020.

	Rs.		Rs.
5,000 equity shares of Rs. 100 each Rs. 75 paid up	3,75,000	Land and Buildings	1,50,000
5,000 equity shares of Rs. 100 each Rs. 50 per share paid up	2,50,000	Plant and Machinery	5,50,000
2,000, 10% preference shares of Rs. 100 each	2,00,000	Patents	70,000
5% debentures	3,00,000	Stock	1,30,000
Interest outstanding on debentures	15,000	Debtors	2,35,000
Creditors	2,60,000	Cash at bank	30,000
		Profit and loss a/c	2,35,000
	14,00,000		14,00,000

Divident on preference shares are in arrears for two years. The arrears are payable automatically on liquidation. Creditors include preferential creditors Rs. 15,000 and a mortgage loan for Rs. 1,20,000 secured by a mortgage on land and building.

The assets were realised as under :

Land and building Rs. 2,30,000, Plant and Machinery Rs. 4,50,000, Patents Rs. 45,000, Debtors Rs. 2,00,000 and stock Rs. 1,15,000. The expenses of liquidation amounted to Rs. 13,500. The liquidator is entitled to remuneration of 3% on all assets realised (except cash at bank) and 2% on amount distributed to unsecured creditors (except preferential creditors). All payment were made on 30th June 2021.

Prepare the liquidator's final statement of receipts and payments.

நிறுமம் 31.12.2020-ல் கலைக்கப்பட்டது. அந்நாளில் இருப்பு நிலை குறிப்பு கீழ்கண்டவாறு இருந்தது.

	ரூ.		ரூ.
5000 சாதாரண பங்குகள் ரூ. 100, ரூ. 75 செலுத்தியது	3,75,000	நிலம் மற்றும் கட்டிடம்	1,50,000
5,000 சாதாரண பங்குகள் ரூ. 100, ரூ.50 செலுத்தியது	2,50,000	எந்திரம் மற்றும் பொறி	5,50,000
2,000. 10% முன்னுரிமை பங்குகள் ரூ. 100 வீதம்	2,00,000	உரிமை	70,000
5% கடன் பத்திரங்கள்	3,00,000	சரக்கிருப்பு	1,30,000
வட்டி நிலுவை கடன் பத்திரங்கள்	15,000	கடனாளிகள்	2,35,000
கடனீந்தோர்கள்	2,60,000	வங்கியில் ரொக்கம்	30,000
		லாப நட்ட க/கு	2,35,000
	14,00,000		14,00,000

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுரிமை பங்காதாயம் கொடுபட வேண்டியுள்ளது. நிலுவை தொகை நிறும கலைப்பின் போது தானாக செலுத்தப்படும். ரூ. 15,000 மதிப்புள்ள அடமானக் கடன், ரூ, 1,20,000 நிலம் மற்றும் கட்டிடத்தை ஈடாக வைத்து பெறப்பட்ட கடன் தொகை கடனீந்தோர் தொகையில் சேர்ந்துள்ளது.

சொத்துக்கள் பணமாக்கப்பட்ட விவரம் :

நிலம், கட்டிடம் ரூ. 2,30,000, எந்திரம் மற்றும் பொறி ரூ. 4,50,000, உரிமை ரூ. 45,000, கடனாளிகள் ரூ.2,00,000, சரக்கிருப்பு ரூ. 1,15,000.

கலைப்பு செலவுகள் ரூ. 13,500, ரொக்கத்தை தவிர ஏனைய சொத்துக்கள் விற்றதில் 3% தரகும், பிணையில்லா கடனீந்தோர்களுக்கு செலுத்தியதில் 2% தரகும் கலைப்பாளருக்கு உரித்தாகும். அனைத்து செலவுகள் 30 ஜீன் 2021ல் செலுத்தியதாகக் கொள்க.

கலைப்பாளரின் கணக்கு அட்டவணையைத் தயார் செய்க.

23. The balance sheet of H Ltd. and S Ltd., on 31.12.20 are given below :

Liabilities	H Ltd.	S Ltd.	Assets	H Ltd.	S Ltd.
Share capital (Rs. 100 each)	3,00,000	50,000	Land and buildings	1,65,000	–
General reserve	20,000	20,000	Plant and Machinery	2,00,000	–
Profit and Loss a/c (1.1.2020)	50,000	25,000	Stock	40,000	90,000
Profit for 2020	60,000	36,000	Debtors	15,000	50,000
Creditors	60,000	40,000	Bank	15,000	16,000
Bills payable	20,000	–	Bills receivable	–	15,000
			Investments :		
			300 shares in S Ltd.	75,000	–
	5,10,000	1,71,000		5,10,000	1,71,000

Additiional Information

(a) Shares were acquired by H Ltd. on 1.6.2020.

(b) Bills receivable Rs. 10,000 held by S Ltd. are accepted by H Ltd.

(c) Include in the debtors of S Ltd. is 10,000 owing by H Ltd. in respect of goods supplied.

Prepare consolidated balance sheet.

31.12.2020 முதல் H லிட் மற்றும் S லிட்-ன் இருப்புநிலைக் குறிப்புகள் பின்வருமாறு.

பொறுப்புகள்	H லிட் ரூ.	S லிட் ரூ.	சொத்துக்கள்	H லிட் ரூ.	S லிட் ரூ.
பங்கு முதல் :			நிலமும் மற்றும் கட்டிடமும்	1,65,000	–
பங்கு ரூ. 100 வீதம்	3,00,000	50,000			
பொதுகாப்பு	20,000	20,000	பொறி மற்றும் எந்திரம்	2,00,000	–
லாப நட்ட க/கு 1.1.2020	50,000	25,000	சரக்கிருப்பு	40,000	90,000
2020 ஆம் ஆண்டு இலாபம்	60,000	36,000	கடனாளிகள்	15,000	50,000
கடனீந்தோர்கள்	60,000	40,000	வங்கி	15,000	16,000

செலுத்ததற்குரிய மாற்றுசீட்டு	20,000	–	பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு	–	15,000
			முதலீடு : S லிட் ன் 300 பங்குகள்	75,000	–
	5,10,000	1,71,000		5,10,000	1,71,000

கூடுதல் விவரங்கள்

(அ) 1.6.2020 அன்று H லிட் பங்குகளை வாங்கியது.

(ஆ) S லிட் - இடம் உள்ள ரூ. 10,000 மதிப்புள்ள பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு H லிட் ஒப்புதளித்தது.

(இ) S லிட்டின் கடனாளிகளில் ரூ. 10,000 சேர்ந்துள்ளது. அத்தொகை, பொருள் அனுப்பினதால் H லிட் தர வேண்டியது. ஒருங்கிணைந்த இருப்புநிலை குறிப்பை வரைக.

24. State the guidelines of RBI for preparation of profit and loss account.

இலாப-நட்ட கணக்கு தயாரித்தலின் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களை விவரி.